"இனிமையான குழந்தைகளே! தூய்மையாவதற்காக தன்னுடைய சுயதர்மத்தில் இருங்கள், அசரீரி ஆகி, ஒரு பாபாவை நினைவு செய்யுங்கள்"

கேள்வி: எந்த விதியின் மூலம் புதிய மாணவர்கள் மீது ஞானத்தின் வர்ணத்தைத் தெளிக்க முடியும்?

பதில்: முதன்-முதலில் அவர்களை ஏழு நாட்கள் பட்டியில் அமர வையுங்கள். எந்த ஒரு ஆத்மா வந்தாலும் முத-ல் அவர்களிடம் படிவத்தைக் கொடுத்து நிரப்ப வையுங்கள்--இது விதியாகும். முதலில் ஏழு நாட்கள் பட்டியில் இருக்க வேண்டும் அப்போது தான் முழுமையான நிறம் ஏற்படும். குளவிகளாகிய நீங்கள் ஞானத்தின் பூம்-பூம் செய்து உங்களுக்குச் சமமாக மாற்று கிறீர்கள். இப்போது தேவதா தர்மத்தின் நாற்று நடப் படுகிறது, என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர் கள். யார் இந்த வம்சத்தைச் சேர்ந்த ஆத்மாக்களாக இருப்பார்களோ அவர்கள் மகா-நோயாளி களிலிருந்து நோயற்றவர்களாக ஆவதற்கான முயற்சியில் ஈடுபட்டுவிடுவார்கள்.

பாடல்: கூட்டத்தில் எழுந்த விளக்கு .....

ஓம் சாந்தி! குழந்தைகளுக்கு ஓம் சாந்தியினுடைய அர்த்தம் புரிய வைக்கப்பட்டுள்ளது. ஓம் என்றால் அகம் (உள்ளே) உள்ளே யார்? ஆத்மா மற்றும் என்னுடைய சரீர கர்மேந்திரியங் கள். ஆத்மாவின் சுய தர்மமே அமைதியாகும். ஆத்மா யாருடைய குழந்தை? பரமபிதா பரமாத்மாவின் குழந்தை என்று சொல்வார்கள். அவரும் கூட அமைதியானவர். ஆத்மாக்கள் அமைதியான உலகத்தில் சாந்திதாமத்தில் வசிக்கின்றது. பிறகு நடிப்பை நடிப்பதற்கு பேசும் உலகத்திற்கு (பஹப்ந்ஹ் ஜர்ழ்ப்க்) வருகிறது. இப்போது எல்லையற்ற தந்தை கூறுகின்றார் -- ஹே குழந்தைகளே!, உங்களுடைய சுயதர்மத்தில் இருங்கள். அசரீரி ஆகி அமருங்கள். பாபாவை நினைவு செய்யுங்கள். அந்த தந்தையை விளக்கு என்றும் சொல்லப்படுகிறது. இப்போது இது தூய்மையற்ற மனிதர்களின் கூட்டமாகும். இந்த சமயத்தில் இது தூய்மையற்ற உலகமாகும். மனிதர்கள் அனைவரும் தூய்மையற்றவர்களாக இருக்கிறார்கள். சத்யுகத்தில் பாரதம் தூய்மையாக இருந்தது, என்று புரிய வைக்கப்பட்டுள்ளது. குடும்ப தர்மம் என்று சொல்லப்படுகிறது, அதை சுகதாமம் என்று சொல்கிறார்கள். பாரதம் தூய்மையாக இருந்தது, இப்போது தூய்மையற்றதாக இருக்கிறது. துக்கதாமமாக இருக்கிறது. இந்த சக்கரம் சுற்றிக் கொண்டே இருக்கிறது. இப்போது இது நன்மையளிக்கும் சங்கமயுகமாகும், தூய்மையற்ற மனித உலகத்தைத் தூய்மையாக்குவதற்காக, இப்போது தூய்மையற்ற மனித-உலகத்தில் பாபா வர வேண்டியிருக்கிறது. பழைய உலகத்திலிருந்து புதிய உலகமாக படைப்பவர் பாபாதான் மாற்றுகிறார், அவரைத் தான் பரமபிதா பரமாத்மா என்று சொல்லப்படுகிறது. அனைத்து பக்தர்களின் பகவான் ஒருவரே ஆவார். ஆக பாபா கூறுகின்றார் - நானும் கூட தூய்மையற்ற உலகத்தில், தூய்மையற்ற சரீரத்தில் வர வேண்டியிருக்கிறது. பாரதத்தை தூய்மையான தெய்வீக இராஜ்ஜியமாக மாற்ற பரந்தாமத்திலிருந்து ஒரே ஒரு முறை தான் வருகிறேன். இந்த உலகத்தின் வரலாறு-புவியியலை யாரும் தெரிந்திருக்கவில்லை, ஏனென்றால், அனைவரும் நாத்திகர்களாக இருக்கிறார்கள். ஒரு ஆஸ்திக மனிதர் கூட இல்லை. பாபாவைத் தெரியாத காரணத்தினால் அனாதைகளாகி விட்டார்கள்.

தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். வீட்டுக்கு வீடு எவ்வளவு அமைதியற்ற நிலை இருக்கிறது! சத்யுகத்தின் ஆரம்பத்தில் ஒரு சர்வ சக்திவானின் தேவி-தேவதைகளின் இராஜ்யம் இருந்தது, சுகதாமமாக இருந்தது. பிறகு எப்படி துக்கதாமமாகியது, என்பதை யாரும் தெரிந்திருக்கவில்லை.

ஞானம் பிரம்மாவின் பகலாகும். பக்தி பிரம்மாவின் இரவாகும். சன்னியாசிகள், ஞானம், பக்தி, வைராக்கியம் என்று சொல்கிறார்கள். அவர்கள் வீடு-வாசலை விட்டுவிட்டு காட்டுக்குச் சென்று விடுகிறார்கள். அது ரஜோகுண சன்னியாசமாகும், இது சதோபிரதான சன்னியாசமாகும். இந்த பாவ ஆத்மாக்களின் உலகத்தில் ஒருவர் கூட புண்ணிய ஆத்மா கிடையாது. இந்த அனைத்து விளையாட்டும் பாரதத்தில் தான் நடைபெறுகிறது. பாரதம் தங்கக் குருவியாக இருந்தது. பாரதத்தில் அளவற்ற தங்கங்களும் வைரங்களும் இருந்தன. தங்கத்தால் மாளிகைகள் கட்டப் பட்டன. மேலும் வைர-வைடூரியங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இப்போதோ பாரதம் சோழி போல் ஆகிவிட்டது. பிறகு அதை வைரம் போல் பாபா தான் மாற்றுகிறார். நாம் மனிதனி லிருந்து தேவதையாக ஆகிக் கொண்டிருக்கிறோம், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். இப்போது அந்த தந்தை தூய்மையற்றவர்களின் கூட்டத்தில் வந்துள்ளார். கங்கை தூய்மை யற்றவர்களைத் தூய்மையாக்கக் கூடியது, என்று புரிந்து கொண்டு மனிதர்கள் கங்கையில் குளிக்கச் செல்கிறார்கள். இருந்தாலும் கூட யாரும் பாவ ஆத்மாவிலிருந்து புண்ணிய ஆத்மா வாக ஆவதில்லை. பிறகு வருடா வருடம் சென்று கங்கையில் குளிக்கிறார்கள். இந்த சமயத்தில் யாரும் தூய்மையானவர்கள் இல்லை. எதுவரை தூய்மையாக்கும் தந்தை வர வில்லையோ அதுவரை தூய்மையாக ஆக முடியாது. கீதையின் பகவான் தான் தூய்மை யாக்குகின்றார். அந்த பகவான் அனைத்து ஆத்மாக்களுக்கும் தந்தை ஒருவரே ஆவார். அனைத்து பக்தர்களும் பகவான் என்பதும் கிடையாது, அல்லது பகவான் சர்வவியாபி என்பதும் கிடையாது. இதன் மூலம் பகவானை நிந்திக்கிறார்கள், ஆகையினால் தான் "யதா யதாகி ......... இது பாரதத்திற்காகத்தான் பாடப்பட்டிருக்கிறது. எந்த தந்தை பாரதத்தை வைரம் போல் ஆக்குகிறாரோ, அவரை எவ்வளவு நிந்தனை செய்கிறார்கள். பிறகு ரிஷிகளும் முனிவர்களும், படைப்பவர் மற்றும் அவருடைய படைப்புகள் எல்லையற்றது அல்லது எங்களுக்குத் தெரியாது, என்று கூறி வந்துள்ளனர். மேலும் இன்றைய மனிதர்கள் சர்வவியாபி (எங்கும் நிறைந்தவர்), என்று சொல்லி விடுகிறார்கள். எப்பொழுது இப்படி ஆகிவிடு கிறார்களோ, அப்பொழுது நான் வந்து பாவ ஆத்மாவிலிருந்து புண்ணிய ஆத்மாவாக, தேவதையாக மாற்றுகிறேன், என்று பாபா கூறுகின்றார். அனைவருக்கும் சத்கதியை வழங்கும் வள்ளல் ஒருவரே ஆவார். அவர் தான் வந்து தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மையாக்கி தகுதியானவர்களாக ஆக்குகிறார். குழந்தைகளுக்கு ஆஸ்தியைக் கொடுக்கின்றார். லௌகீக தந்தையிடமிருந்து அல்பகாலத்திற் கான ஆஸ்தி கிடைத்தது. நான் உங்களுக்கு லௌகீக தந்தை கொடுக்க முடியாத தூய்மை, சாந்தி மற்றும் சுகத்தின் ஆஸ்தியை 21 பிறவிகளுக்குக் கொடுக்கின்றேன், என்று எல்லையற்ற பாபா கூறுகின்றார். அவர் தந்தையாகவும் இருக்கிறார், ஆசிரியராகவும் இருக்கிறார், ஞானக் கடலாகவும் இருக்கின்றார். பாபாவின் மகிமை மிகவும் உயர்ந்ததாக இருக்கிறது, மனித சிருஷ்டியின் விதை ரூபமாகவும் இருக்கிறார். இது மனித சிருஷ்டியின் விதவிதமான தர்மங்களின் மரமாக இருக்கிறது. ஆதி சனாதன தேவி-தேவதா

தர்மம் சத்யுகத்தின் தர்மமாகும். அதிலிருந்து பிறகு மற்ற தர்மங்கள் வெளிவருகின்றன. இப்போது நீங்கள் பிராமண தர்மத்தைச் சேர்ந்தவர்களாக ஆகியுள்ளீர்கள். இதற்கு முன்பு சூத்திர தர்மத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தீர் கள். இப்போது பிராமணரிலிருந்து மீண்டும் தேவதை பிறகு சத்திரியர்களாக ஆவீர்கள். இந்த 84 பிறவிகளின் சக்கரத்தைச் சுற்ற வேண்டியிருக்கிறது. சத்யுகத்தில் கூட முதன்-முதலில் நீங்கள் தான் வருவீர்கள். ஆத்மாவும் பரமாத்மாவும் நீண்ட காலம் பிரிந்திருந்தார்கள்.......... என்று கூட பாடப்படுகிறது. பாட்டில் கூட கேட்டீர்கள் - நாலாபுறமும் சுற்றி அலைந்தோம். இருந்தாலும் ஒவ்வொரு முறையும் தூரத்தில் தான் இருந்தோம் அதாவது பாபாவைச் சந்திக்க முடியவில்லை.

இப்பொழுது இராவண இராஜ்யமாக இருக்கிறது. இராம இராஜ்யம் தெய்வீக இராஜ்யமாகும். மனிதர்கள், சொர்க்கமும்-நரகமும் இங்கே தான் இருக்கிறது, என்று நினைக்கிறார்கள். ஆனால் அப்படி இருக்க முடியாது. மனிதர்கள் இறந்து விட்டால் சொர்க்கவாசியாகி விட்டார் என்று சொல்கிறார்கள், அப்படி என்றால் கண்டிப்பாக நரகத்தில் தான் இருந்திருப்பார். மேலும் மறுபிறவியும் நரகத்தில் தான் எடுக்க வேண்டியிருக்கும். மனிதர் களுடையது அனேக வழிமுறைகளாகும். ஒன்று மற்றொன்றோடு ஒத்துப்போகாது. அனேக விதமான துவைத வழிகளாகும். அரைகல்பம் பாரதத்தில் தெய்வீக வழி இருக்கிறது. இப்போது அசுர வழியாகும். பாரதவாசிகள் எந்த பகவானை நினைவு செய்கிறார்களோ, அந்த பரலௌகீக தந்தையை தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா? இப்போது பாரதம் சோழியைப் போல் இருக்கிறது. அதை (பாரதத்தை) வைரத்தைப் போல் மாற்ற வேண்டும். பாரதத்தில் உலக சர்வசக்திவானது இராம இராஜ்யம் வேண்டும், என்று காந்தி மற்றும் நேரு கூட விரும்பினார்கள். ஏதோ ஒரு சமயத்தில் பாரதத்தில் இராம இராஜ்யம் இருந்தது, இப்போது இல்லை என்று புரிந்திருக் கிறார்கள். ஆகையினால் தான் இராம இராஜ்யத்திற்கு முயற்சி செய்கிறார்கள் இல்லையா! ஆனால் இது எந்த மனிதர்களின் கையிலும் இல்லை. நீங்கள் பிராமணர்கள், பிரஜாபிதா பிரம்மாவின் குழந்தைகளாவீர்கள். நிராகார ஆத்மாக்கள் பரமபிதா பரமாத்மாவின் குழந்தை களாகும். ஆஸ்தி பிரம்மாகுமார குமாரிகளுக்காகும். பிரம்மாவிற்கும் கூட ஆஸ்தி சிவபாபா விடமிருந்து கிடைக்கிறது. இவர் கூட சகோதரர் ஆகிவிட்டார். குழந்தைகள் அனைவரும் சகோதர-சகோதரர்கள் என்றால் கண்டிப்பாக அனைத்து ஆத்மாக்களுக்கும் ஒரு தந்தை தான் இருக்கிறார். இப்போது பிரம்மாவின் வாய்வம்சாவழி பிராமணர்களாகிய நீங்கள் தங்களுக்குள் சகோதர-சகோதரிகளாவீர்கள். உங்களுக்கு தாத்தாவிடமிருந்து ஆஸ்தி கிடைக்கிறது. பெண்ணின் சரீரத்தில் இருந்தாலும் சரி, ஆணின் சரீரத்தில் இருந்தாலும் சரி, தாத்தாவின் ஆஸ்தியின் மீது அனைத்து ஆத்மாக்களுக்கும் உரிமை இருக்கிறது. லௌகீக தாத்தாவின் ஆஸ்தி ஆண் குழந்தைக்கு மட்டும் தான் கிடைக்கிறது. இவரோ எல்லையற்ற தந்தை அல்லவா! பாரதவாசிகளுக்கு சத்யுகம்-திரேதாவில் எல்லையற்ற தந்தையிடமிருந்து 21 தலை முறைக்கு மிகுந்த சுகம் கிடைத்திருக்கிறது. நீங்கள் இப்போது 84 பிறவிகளின் சக்கரத்தைப் புரிந்து கொண்டீர்கள். பாபா கூறுகின்றார் - உங்கள் அனைவரையும் அழைத்துச் செல்வதற்கு நான் வழிகாட்டியாகி வந்திருக்கிறேன். நீங்கள் தான் முதன்-முதலில் வந்திருந்தீர்கள். இப்போது கடைசியிலும் நீங்கள் தான் இருக்கிறீர்கள். பிறகு முதன்-முதலில் நீங்கள் தான் மனிதரிலிருந்து

தேவதையாக ஆகப்போகிறீர்கள். தேவி-தேவதா தர்மத்தைச் சேர்ந்தவர்கள் தான் 84 பிறவிகள் எடுக்கிறார்கள். பிறகு வரிசைக்கிரமமாக அனைவருக்கும் பிறவிகள் குறைந்து கொண்டே செல்கிறது. மற்ற தர்மத்தைச் சேர்ந்தவர்களுக்கு கண்டிப்பாக குறைந்த பிறவிகள் தான் இருக்கும். இப்போது அந்த ஆதி சனாதன தேவி-தேவதா தர்மம் இல்லை. மீண்டும் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. இப்ராஹிம் பிறகு எப்போது வருவார், என்பது உங்களுக்குத் தெரியும். ஏசு கிறிஸ்து எவ்வளவு காலத்திற்குப் பிறகு வருவார்? இந்த உலகத்தின் வரலாறு-புவியியலை மனிதர்கள் தான் தெரிந்து கொள்வார்கள் அல்லவா? பாபா புரியவைக்கின்றார் - எப்போது அனைவரும் பாவ ஆத்மாக்களாகி விடுகிறார்களோ, அப்போது நான் வந்து புண்ணிய ஆத்மாக் களாக்குகிறேன். எது கல்பத்திற்கு முன்பு உருவாகியிருந்ததோ, அதனுடைய நாற்றை நட்டுக் கொண்டிருக்கிறேன். சத்யுகத்தில் ஒரு தர்மம் தான் இருந்தது. இப்போதோ கலியுகத்தில் அனேக தர்மங்கள் இருக்கின்றன. தூய்மை யற்ற ஆத்மாக்களின் கூட்டமாகும். பாபா அனைவரையும் தூய்மையாக்குவதற்கு வருகின்றார். சத்கதியைக் கொடுக்கக் கூடியவர் அந்த ஒருவரே ஆவார். மாயை இராவணன் துர்க்கதியை ஏற்படுத்துகிறான். ஆகையினால் தான் தேவதைகளுக்கு முன் சென்று என்னிடத்தில் குணங்களே இல்லை, குணமில்லாதவனாக இருக்கிறேன், என்று பாடுகிறார்கள். பாபா வந்து தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மையாக்கி தெய்வீக குணமுடையவர்களாக மாற்றுகிறார். இப்போது நீங்கள் தெய்வீக குணங்களை தாரணை செய்து கொண்டே செல்கிறீர்கள். பிறகு பாரதத்தில் தெய்வீக இராஜ்யம் ஆகி விடும். இப்போது இந்த உலகம் மாறிக் கொண்டிருக்கிறது.

நீங்கள் எல்லையற்ற சன்னியாசிகள். அவர்களுடையது எல்லைக்குட்பட்ட வைராக்கியமாகும். இது எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கியமாகும். நீங்கள் முழு பழைய உலகத்தையும் மறந்து தன்னுடைய தந்தையை நினைவு செய்து ஆஸ்தியை அடைகிறீர்கள். பாபா கூறுகின்றார் -- என்னை நினைவு செய்தீர்கள் என்றால் அந்த நினைவு அல்லது யோக அக்னியின் மூலம் பாவ கர்மங்கள் வினாசமாகும். பிறகு நீங்கள் விகர்மங்களை வென்றவர்களாக ஆவீர்கள். யாராவது 4-5 பேர்கள் ஒன்றாக வந்தார்கள் என்றால் தனித்தனியாக படிவத்தை (எர்ழ்ம்) நிரப்பச் சொல்லுங்கள் என்று பாபா புரிய வைத்திருக்கின்றார். அப்போது அவர்கள் எந்த தர்மத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வரும். அனேக தர்மங்கள், அனேக வழிகள் உள்ளன அல்லவா? தேவி-தேவதா தர்மத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தான் அம்பு தைக்கும். கராச்சியில் இருக்கும் போது அனைவருக்கும் தனித்- தனியாகத் தான் புரிய வைத்தோம். படிவம் நிரப்பும் விதி கூட அவசியமாகும். 7 நாட்கள் பட்டியில் அமர்த்த வேண்டும், ஏனென்றால் மகாரோகியாக (அதிக விகாரமுடையவர்) ஆகிவிட்டார்கள். குழந்தைகளாகிய நீங்கள் குளவிகளாவீர்கள். பூம்-பூம் (குளவி ஏற்படுத்தும் ஓசை) செய்து தனக்குச் சமமாக உருவாக்க வேண்டி இருக்கிறது. தேவதா தர்மத்தைச் சேர்ந்தவர்களுடைய நாற்று தான் நடப்படும். குழந்தைகள் யுக்திகளும் கற்றுக் கொள்ள வேண்டும். ஏழு நாட்கள் புரிந்து கொண்டால் தான் சந்திக்க முடியும். மேலும் உங்கள் மீது ஞானத்தின் நிறம் ஏற்படும். நீங்கள் அனைவரும் பிரம்மா குமார-குமாரிகளாவீர்கள். இவ்வளவு பிரம்மா குமார-குமாரிகள் என்ன? யார்?, என்று மனிதர்கள் இந்தளவிற்குக் கூட கேட்பது இல்லை. பிரஜாபிதா பிரம்மாவின் குழந்தைகள் என்றால் கண்டிப்பாக பிரம்மா குமார-குமாரிகள்

என்று தான் சொல்ல முடியும் அல்லவா? குற்றப்பார்வை (விகார) இருக்க முடியாது. இது இராஜயோகம், இறை தந்தையின் பல்கலைக்கழகமாகும். பகவானுடைய மகாவாக்கியம் -- நான் உங்களை இராஜாவுக்கெல்லாம் இராஜாவாக மாற்றுகிறேன். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகத் தந்தையின் ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) விகர்மங்களை வென்றவர்களாக ஆவதற்கு முழு பழைய உலகத்தின் மீதும் எல்லையற்ற வைராக்கியம் வைத்து, இந்த பழைய உலகத்தை மறந்து ஒரு பாபாவின் நினைவில் இருக்க வேண்டும்.

(2) குளவியைப் போல் பிறர் மீது ஞானத்தின் நிறத்தை ஏற்றுவதற்கான சேவை செய்ய வேண்டும். யுக்தியோடு மகாரோகிகளை (அதிக விகாரமான) வியாதியற்றவர்களாவும், நாஸ்திகர்களை ஆஸ்திகர்களாகவும் மாற்ற வேண்டும்.

வரதானம் : சதா சாட்சி ஸ்திதியில் நிலைத்திருந்து நிர்லேப் (ஒட்டாத) நிலையின் அனுபவம் செய்யக் கூடிய சகஜயோகி ஆகுக.

யார் தேக சம்பந்தம் மற்றும் தேகத்தை சாட்சியாக அதாவது விடுபட்டிருக்கிறார்களோ அவர்கள் இந்த பழைய உலகி-ருந்தும் சாட்சியாகி விடுவார்கள். அவர்கள் சம்பந்தங்களில் வந்தாலும், பார்த்தாலும் சதா விடுபட்டு மற்றும் அன்பாக இருப்பார்கள். இந்த நிலை தான் சகஜயோகியின் அனுபவம் செய்விக்கும். இது தான் கூடவே இருந்தாலும் ஒட்டாத நிலை என்று கூறப்படுகிறது. ஆத்மாவில் எதுவும் ஒட்டாது என்று கிடையாது, ஆனால் ஆத்மா அபிமானி நிலை நிர்லேப் அதாவது மாயாவின் ஈர்ப்பி-ருந்து விடுபட்டிருப்பதாகும். இந்த நிலையில் இருப்பவர்கள் மாயாவின் யுத்தத்தி-ருந்து தப்பித்து விடுவார்கள்.

சுலோகன்: சுபபாவனை மற்றும் சுப விருப்பம் மூலம் சூட்சும சேவை செய்பவர்கள் தான் மகான் ஆத்மாக்கள்.

மாதேஷ்வரி அவர்களின் மகாவாக்கியம்

பரமாத்மா ஒருவர் ஆவார் மற்றவர்கள் அனைவரும் மனித ஆத்மாக்கள் ஆவார்கள்.

இப்பொழுது பரமாத்மா ஒருவர். அவர் சர்வசக்திவான் ஆவார் மற்றும் அவர் அனைத்தும் அறிந்தவர் என்பதையோ முழு உலகமும் அறிந்துள்ளது. அப்படியும் நாம் பரமாத்மாவின் குழந்தைகள் ஆவோம் என்பதையோ முழு உலகம் சுயம் கூறுகிறது. பரமாத்மா ஒருவர் ஆவார். எந்த தர்மத்தினராக இருந்தாலும் கூட அவர்களும் பரமாத்மாவைத் தான் ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் கூட தங்களை பரமாத்மாவால் அனுப்பப்பட்ட செய்தி தூதர்கள் ஆவோம் என்று கருதுகிறார்கள். அவ்வாறே செய்தி பெற்று அவரவர் தர்மத்தை

ஸ்தாபனை செய்கிறார்கள். எப்படி குருநானக் கூட ஏகோங்கார் சத்நாம் என்று பரமாத்மாவை இந்த அளவிற்கு பெருமைப்படுத்தி உள்ளார். ஏகோங்கார் என்பதன் பொருள் பரமாத்மா ஒருவரே ஆவார் என்பதாகும். சத் நாம் என்றால் அவரது பெயர் சத்தியம் ஆகும். அதாவது பரமாத்மா விற்கு பெயர், ரூபம் கூட உண்டு என்பதாகும். அவினாஷி ஆவார். அகால மூர்த்தியும் ஆவார். பின் கர்த்தா புருஷரும் ஆவார். அதாவது அவர் சுயம் அகர்த்தாவாக இருக்கும் பொழுது கூட எப்படி பிரம்மா உடல் மூலமாக கர்த்தா புருஷர் கூட ஆகிறார். இப்பொழுது இந்த முழு மகிமை ஒரு பரமாத்மாவினுடையதாகும். இப்பொழுது மனிதர்கள் இவ்வளவு புரிந்திருந்தும் கூட பிறகு இறைவன் எல்லா இடத்திலும் இருக்கிறார் என்று கூறுகிறார்கள். நான் ஆத்மாவே பரமாத்மா ஆவேன். எல்லோருமே பின் பரமாத்மா ஆகி விட்டார்கள் என்றாகிறது. ஏகோங்கர் என்ற இந்த மகிமை எந்த பரமாத்மாவிற்கு செய்கிறார்கள். இதிலிருந்து பரமாத்மா ஒருவர் ஆவார் என்பது நிரூபணமாகிறது.

நேரிடையான ஈசுவரிய ஞானத்தினால் வெற்றி.

நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கும் இந்த அழியாத ஞானம் நமக்கு நேரிடையாக ஞானக் கடலான பரமாத்மா மூலமாக கிடைத்துக் கொண்டிருக்கிறது. இந்த ஞானத்தை நாம் ஈசுவரிய ஞானம் என்று கூறுகிறோம். ஏனெனில் இந்த ஞானத்தினால் மனிதர்கள் முதல், இடை, கடை சுகம் பெறுகிறார்கள். அதாவது ஜன்ம ஜன்மாந்திர துக்கங்களின் பந்தனத்திலிருந்து விடுபட்டு விடுகிறார்கள். கர்ம பந்தனத்தில் வருவதில்லை. எனவே தான் இந்த ஞானத்திற்கு அவினாஷி ஞானம் என்று கூறப்படுகிறது. இப்பொழுது இந்த ஞானம் ஒரேயொரு அவினாஷி பரமபிதா பரமாத்மா மூலமாக மட்டுமே நமக்கு பிராப்தியாகக் கிடைக்கிறது. ஏனெனில் அவர் சுயம் அவினாஷி (அழியாதவர்) ஆவார். மற்றபடி அனைத்து மனித ஆத்மாக்களும் பிறப்பு இறப்பு சக்கரத்தில் வரக் கூடியவர்கள் ஆவார்கள். எனவே அவர்களிடமிருந்து பெறப்படும் ஞானம் நமக்கு கர்மபந்தனத்திலிருந்து விடுதலை அளிக்க கூடியது இல்லை. இக்காரணத்தினால் அவர்களது ஞானத்தை பொய்யான (கற்பனை) ஞானம் அல்லது அழியக் கூடிய ஞானம் என்று கூறுவார்கள். ஆனால் இந்த தேவதைகள் எப்பொழுதும் அமரர் ஆவார்கள். ஏனெனில் இவர்கள் அவினாஷி பரமாத்மா மூலமாக இந்த அவினாஷி ஞானத்தைப் பெற்றுள்ளார்கள். எனவே பரமாத்மாவும் ஒருவர் ஆவார். பின் அவரது ஞானம் கூட ஒன்று தான் என்பது இதன் மூலம் நிரூபணம் ஆகிறது. இந்த ஞானத்தில் இரண்டு முக்கிய விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும். ஒன்று இதில் விகாரி கலியுக சகவாச தோஷத்திலிருந்து விலகி இருக்க வேண்டும். மேலும் இழி குலத்தின் உணவு பழக்கங்கள் ஆகியவற்றில் பத்தியமாக இருக்க வேண்டும். இந்த கட்டுப்பாடு கொள்வதாலேயே வாழ்க்கை பயனுள்ளதாக ஆக முடியும். நல்லது. ஓம் சாந்தி.